**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**<u>OS. NO: 1873/2024</u>**

**<u>Deposition of: DW1</u>** **<u>DATE: 25.08.2025</u>**

**NAME: M.மோசஸ் சந்தானம்**

**AGE: 49 Years**

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்</u>:**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் வேலைக்கு சேர்ந்த போது தங்கமணி என்பவர் எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையிலும், எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையிலும் வேலையில் இருந்தார் என்றால் சரியல்ல. எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையில் மட்டும் வேலையில் இருந்தார். அந்த முகவரியில் உள்ள கடையின் பெயர் தெரியுமா என்றால் அந்த கடைக்கு பெயர் இல்லை. நான் வேலை செய்தபோது எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடை கட்டிடத்தின் உரிமையாளர் யார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையில் நான் வேலை செய்த போது எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடை இருந்தது. அந்த கடையிலும் தங்கமணி தான் மேனேஜராக இருந்தார் என்றால் சரி தான். எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையில் நான் வேலை செய்தபோது தங்கமணியிடம் சம்பளம் பெற்றேன் என்பதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரி தான். எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடைக்கும், எண்.32a, சந்திரபானு

தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடைக்கும் தங்கமணி தான் உரிமையாளர் என்று வருமானவரி, வணிகவரி, தொழில் வரி முதலிய வரிகள் தங்கமணி பெயரில் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையை நான் யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் டென்னிசன் என்பவரிடம் இருந்து வாங்கினேன். எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையை நான் விலைக்கு கேட்டால் எல்.வி.செல்வராஜ் என்பவர் எனக்கு விலைக்கு கொடுக்கமாட்டார் என்பதால் டென்னிசன் பெயரில் வாங்கி அவரிடமிருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் அதுபோல் சொல்ல முடியாது. கட்டிட உரிமையாளர் எல்.வி.செல்வராஜ் எனக்கு கிரையம் கொடுக்கமாட்டார் என்று சொல்லியுள்ளேன், ஆனால் நான் டென்னிசன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். டென்னிசன் மூலமாக நான் கிரையம் பெறுவதற்கு காரணம் கட்டிட உரிமையாளர் எனக்கு கிரையம் கொடுக்கமாட்டார் என்பதற்காக டென்னிசன் மூலமாக கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த டென்னிசன் கல்பாக்கத்தில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் வைத்துள்ளார். நானும், தங்கமணியும் எல்.வி. செல்வராஜிடம் வேலை பார்த்ததால் எங்களுக்கு கடைகளை கிரையம் கொடுக்கமாட்டார் என்று சொன்னால் நான் எல்.வி.செல்வராஜிடம் வேலை பார்க்கவில்லை. தங்கமணி என்பவர் எல்.வி.செல்வராஜிடம் மேனேஜராக வேலை பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையை டென்னிசன் தான் வாங்கினார் என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பற்றிய விவரம் படித்தால் சொல்ல முடியும், ஆனால் எனக்கு இந்த விவரம் தேவையில்லை. இந்த கிரைய பத்திரம் 13.11.2017 ல் டென்னிசன் எல்.வி.செல்வராஜ் என்பவரிடம்

கிரையம் பெற்றாரா என்றால் கிரையம் பெற்றார் என்பது சரி, ஆனால் இந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. எண்.20, Harris Road, Chennai–2 என்ற முகவரியில் உள்ள கடையையும், எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையையும் நான் தான் டென்னிசனை வாங்க வைத்தேன் என்றால் சரியல்ல. இந்த இரண்டு கடைகளின் பெயரும் ராஜ் மோட்டார்ஸ் என்று இருந்தது என்றால் சரியல்ல. 01.06.2017 அன்று ராஜ் மோட்டார் நிறுவனத்தின் உரிமையாளர் எல்.வி.செல்வராஜ் கடையை விற்கப்போகும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 01.06.2017 அன்று கடையை எல்.வி.செல்வராஜ் விற்க போனதால் தங்கமணி கடையை விட்டு வெளியே சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 01.06.2017 தேதிக்கு பிறகு எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையில் நான் தான் மேனேஜர் போல் இருந்தேன் என்றால் சரி தான். 01.09.2017 லிருந்து கடையை நான் தான் பார்த்து கொண்டிருந்தேன் என்றால் சரி தான். தங்கமணி என்பவர் தான் என்னை இந்து மதத்திலிருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றி திருமணம் செய்து கொள்வதற்கு உதவி செய்தார் என்றால் மதம் மாற்றத்திற்கு அவர் காரணம் இல்லை, எனது திருமணத்திற்கு அவர் உதவி செய்தார். திருமணத்திற்கு பிறகு என் குழந்தைகளுக்கு படிப்பு செலவை தங்கமணி செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு 2006 ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு திருமணம் நடந்த காலத்தில் எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையில் வேலையில் இருந்தேன் என்றால் சரி தான். அந்த சமயத்தில் நான் மாத சம்பளமாக ரூ.40,000 பெற்று வந்தேன். நான் இதுபோல் சம்பளம் வாங்கியதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. நான் மாதம் ரூ.40,000 சம்பளம் பெற்றால்

வருமான வரி கட்ட வேண்டும் என்றால் நான் வருமான வரி கட்டவில்லை. 2007 ம் ஆண்டு காலத்தில் எனது பெயரில் எந்த சொத்தும் இல்லை. கடையில் எந்த ஜாமனும் இல்லாததால் 10.10.2017 அன்று வாதியின் உறவினர் செல்வரத்தின நாடார் என்பவரிடம் இருந்து காசோலை மூலமாக ரூ.4 லட்சம் வந்தது. செல்வரத்தின நாடார் என்பவரிடமிருந்து வந்ததா என்று எனக்கு தெரியாது. செல்வரத்தின நாடார் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் எந்த ஊரில் உள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் வேலை செய்த கடையில் மோட்டார் வாகனத்தில் பழைய நல்ல நிலையில் உள்ள spare parts ஐ வாங்கி விற்பனை செய்வோம் என்றால் சரி தான். செல்வரத்தின நாடார் ஒரு பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக உள்ளாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. செல்வரத்தின நாடார் நான் வேலை செய்த கடையில் customer என்பதை நிரூபிப்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. செல்வரத்தின நாடாருக்கு ரூ.4 லட்சத்திற்கு கடையில் இருந்து பொருட்கள் கொடுத்தேன் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆதாரம் ஏதும் இல்லை. செல்வரத்தின நாடாருக்கு பொருட்கள் கொடுத்ததற்கு ஆதாரம் இல்லை. எங்கள் கடைக்கு spare parts வாங்குவதற்கு தமிழ்நாடு முழுவதும் வாடிக்கையாளர்கள் உள்ளார்கள். வாதியின் உறவினர் செல்வரத்தின நாடாரிடமிருந்து வாதி காசோலை மூலம் ரூ.4 லட்சம் பெற்று என்னிடம் அந்த தொகையை கடனாக கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எங்கள் கடையில் விற்பனை செய்யும் பொருட்களுக்கு என்னிடம் ஆதாரம் எதுவும் இல்லை. கடை நடத்தியதற்கு என் பெயரில் விற்பனை வரி பதிவு இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆதாரங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இதுநாள் வரை Income Tax Assessment இல்லை என்றால் சரி தான். எனக்கு

ஆத்திரம், அவசரத்திற்கு வாதியிடம் பணம் கடன் வாங்கும் வழக்கம் உண்டு என்றும், அதனால் தான் எதிர் வழக்குரையில் பக்கம் 2 ல் பாரா 2 ல் வாதியும், நானும் அப்பா, மகன் மாதிரி இருந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் அப்பா மகன் மாதிரி இருந்தேன் என்று சொல்லியுள்ளேன், ஆனால் எங்களுக்கு இடையே கடன் வரவு செலவு கிடையாது. வாதி எனக்கு ஏற்கனவே 01.11.2017 ல் ரூ.9 லட்சத்தை நான் வாதியிடமிருந்து கடனாக வாங்கினேன் என்றால் சரியல்ல. எல்.வி.செல்வராஜ் கடையை பொருட்கள் ஏதும் இல்லாமல் விட்டுவிட்டு சென்றதால் நான் வாதியிடம் ரூ.9 லட்சம் பணத்தை 01.11.2017 அன்று கடனாக வாங்கினேன் என்றால் சரியல்ல. சுந்தர்ராஜ் என்பவரை எனக்கு தெரியும், ஆனால் பழக்கம் இல்லை. கதிரவன், பரமசிவம் ஆகியோரையும் எனக்கு தெரியும் ஆனால் எனக்கு பழக்கம் இல்லை. வாதி ராம்நகரில் உள்ள இடத்தை விற்பனை செய்வதற்காக ரூ.10 லட்சம் அட்வான்ஸ் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 01.11.2017 அன்று நான் வாதியிடமிருந்து ரூ.9 லட்சம் பணம் வாங்கியபோது சுந்தர்ராஜ், கதிரவன், பரமசிவம் ஆகியோர் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வாதியிடமிருந்து மேற்கொண்டு ரூ.4 லட்சம் பணம் கேட்டேன் என்றால் சரியல்ல. வாதிக்கு மாகரல் என்ற பகுதியில் இடம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதிக்கு சொந்தமான மாகரல் என்ற பகுதியில் உள்ள மூன்று ஏக்கர், 36 செண்ட் இடத்திற்கான பத்திரத்தை வாதி என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. சாமி என்பவர் எனக்கு வேண்டப்பட்டவர் என்றால் சரி தான். சாமி என்பவர் பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வந்தார் என்றால் சரி தான். சாமி என்பவருக்கும், வாதிக்கும் பழக்கம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதி என்னிடம் கொடுத்த மூன்று ஏக்கர், 36 செண்ட்டிற்கான பத்திரத்தை சாமியிடம் கொடுத்து நான் ரூ.4 லட்சம் சாமியிடம் கடனாக பெற்றேன்

என்றால் சரியல்ல. சாமியிடம் நான் கடன் வாங்கியதில்லை. வாதிக்கு தெரியாமல் அவர் கொடுத்த அசல் பத்திரத்தை சாமியிடம் கடன் வாங்கி விட்டேன் என்றும், அந்த பத்திரத்தை வாதி திரும்ப கேட்டபோது 19.12.2018 அன்று வாதியிடம் ரூ.4 லட்சம் பெற்று அந்த தொகையை சாமியிடம் கொடுத்து பத்திரத்தை திரும்ப பெற்று வாதியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி தானே ரூ.4 லட்சத்தை சாமியிடம் கொடுத்துவிட்டு பத்திரத்தை திரும்ப வாங்கி கொண்டு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அந்த வரவு செலவுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. சாமி என்பவரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் அதற்கு வாய்ப்பு இல்லை. 10 ஆண்டுகளாக பழக்கம் இல்லை. சாமியை என் தரப்பில் விசாரித்தால் நான் தான் வாதியின் பத்திரத்தை வைத்து ரூ.4 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்ற விவரத்தை சொல்லிவிடுவார் என்பதால் அவரை சாட்சியாக விசாரிக்க போவதில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடமிருந்து வாங்கி கடன் தொகைகளை வைத்து தான் டென்னிசன் என்பவரிடமிருந்து எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையை வாங்கினேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சொத்தின் பரப்பு 186 சதுரஅடி என்றால் சரி தான். அதன் நீளம், அகலம் சுமார் 18X10 அடி இருக்கும் என்றால் சரி தான். எண்.32a, சந்திரபானு தெரு, புதுப்பேட்டை, சென்னை –2 என்ற முகவரியில் உள்ள கடையை ரூ.38 லட்சத்திற்கு கிரையம் வாங்கினேன் என்றால் சரி தான். நான் இந்த கிரையம் பெறுவதற்கு வங்கியில் ரூ.30 லட்சம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் வாங்குவதற்கு என்னிடம் பணம் இல்லாததால் வாதியிடம் ரூ.4,50,000 கடனாக வாங்கினேன் என்றால் சரியல்ல. எனக்கு கார்த்தி என்ற பத்திர எழுத்தரை

தெரியும். சொத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என்றால் online ல் பணம் கட்ட வேண்டும் என்றால் சரி தான். 05.06.2020 அன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.4,50,000 கட்ட பணம் தேவைப்பட்டதால் வாதியிடம் அந்த தேதியில் ரூ.4,50,000 பணம் வாங்கி கார்த்தி மூலமாக கட்டினேன் என்றால் கார்த்தி தான் அந்த பணத்தை கட்டினார், ஆனால் அந்த பணத்தை நான் வாதியிடமிருந்து வாங்கவில்லை. 05.06.2020 அன்று கார்த்தி என்பவரிடம் ரூ.4,50,000 கடன் பெற்று நான் வங்கியில் கடன் வாங்கி அந்த பணத்திலிருந்து கார்த்தி என்பவரிடம் ரூ.4,50,000 திரும்ப கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். சாலிகிராமம் பஞ்சாப் நேஷனல் வங்கியில் நான் ரூ.26 லட்சம் கடன் வாங்கினேன். நான் ரூ.30 லட்சம் கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்று என்னால் சொல்ல இயலாது. வங்கியில் 17.06.2020 அன்று அடமான கடன் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான், தேதி எனக்கு சரியாக ஞாபகமில்லை. கடன் பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு தான் கடன் பெற்றேன் என்றால் சரி தான். 05.06.2020 அன்று கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட பிறகு அடுத்த நாளே ரூ.4,50,000 ஐ கார்த்தி என்பவரிடம் கொடுக்கவில்லை, வங்கியில் கடன் வாங்கிய பிறகு கொடுத்தேன். நான் வாதியிடம் ரூ.21,50,000 கடனாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)